விலை சதம் 10.

# சுதந்திரன்

SUTANTIRAN


வ- ஆ. 2001, வைகாசி 11உ திங்கள் (25-5-70) ற. அவ்வல் பிறை 18 —புத்தகம் 24 இதழ் 46

## தமிழன் தலைநிமிர்ந்து வாழ சமஷ்டியே ஒரே மார்க்கம்!

### தனிநாயக அடிகள் கூறுகிறார்!

இலங்கையில் தோன்றியுள்ள இனவாரிப் பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டில் நிரந்தரமான ஒற்றுமையையும் நல்லுறவையும ஏற்படுத்த சமஷ்டி ஆட்சிமுறை தான் தேவை என்கிறார் பிரபல தமிழறிஞரும் கத்தோலிக்க சுவாமியுமான, வண. பிதா: தனிநாயக அடிகளார். மதத்துறை மொழித்துறை, கலாச்சாரத் துறை பத்திரிகைத் துறை முதலானவற்றிலெல்லாம் தனக்கெனத் தனியிடம் தேடிக்கொண்ட தமிழறிஞராவர். தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் மதிப்புக்கு உரியவர்; இலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர், உலகநாடுகள்

(4-ம் பக்கம் பார்க்க)



தேர்தலில் மண் கவ்வப்போகிறார்கள்... அதற்குள்

## மந்திரிப் பதவி ஏற்பது நீயா நானா?

## தமிழ் காங்கிரசுக்குள் குத்துவெட்டு!

### தமிழுரிமைகளை விற்று பதவிபெறத் திட்டம்!

(யாழ் நிருபர்)

நாளை மறுநாள் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தப்பித்தவறி தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றிபெற்றால், 1948ம் ஆண்டில் தமிழுரிமைகளை விலை கூறிவிற்று பெரிய சேனநாயகாவிடம் மண்டியிட்டு இரந்து பொன்னம்பலம் மந்திரிப் பதவி பெற்றது போல ஆட்சிக்குவரும் சிங்கள ஆட்சிக்கு தமிழினத்தின் உரிமைகளை எழுதிக்கொடுத்துவிட்டு அமைச்சர் பதவிகளை ஏற்பார்கள் என்பது நிச்சயமாகிவிட்டது. தேர்தலில் படுதோல்வியடைந்து புதைகுழிக்கு தமிழ் காங்கிரஸ் அனுப்பப்பட இருப்பதை இன்னும் உணராத காங்கிரஸ் வேட்பாளர்கள், தாங்கள்தான்

அடுத்த அமைச்சர்கள் என்று பகல் கனவு கண்டு வருகிறார்களாம்.

தமிழன் உரிமையை மீட்பதல்ல; மந்திரி பதவி பெறுவதே தமிழ் காங்கிரசின் இலட்சியம் என்பதை இவர்கள் தங்களையறியாமலே இப்போது உளறிக் கொட்டி வருகிறார்கள். காரைநகரில் திரு. தியாகராசாவை ஆதரித்து நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய திரு. பொன்னம்பலம் கல்வி மந்திரியாக இருக்கத் தகுதி பெற்றவர் திரு: தியாகராசா என்று சூள் கொட்டினார். கொட்டடியில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டமொன்றில் திரு. பொன்னம்பலத்தை ஆதரித்து பேசியயூ. என். பி. செனட்டரான திரு. ரணசிங்கா யூ. என். பி. அமைச்சரவையில் பொன்னம்பலம் மந்திரியாவர் என்று ஆசைகாட்டியிருக்கிறார். இதை மேடையிலிருந்த திரு. பொன்னம்பலஏ கைதட்டி வரவேற்றாரே தவிர மறுக்க முன்வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

(4ம் பக்கம் பார்க்க)

தமிழரசுத் தலைவரின் தமிழரசுப் பாசறையான பட்டிருப்பு தொகுதியில், தமிழரசுக் கோட்டைகளுள் ஒன்றான பெரியகல்லாற்றில் நடைபெற்ற மிகப் பிரமாண்டமான பிரசாரக் கூட்டத்தில், எட்டப்பர் கூட்டம் நடுநடுங்கும் வகையில் திருமலைச் செல்வன் —ஜெயசீலன், தமிழரசு வாலிப முன்னணியின் பொதுச்செயலாளர் திரு. திருநாவுக்கரசு ஆகியோர் கொள்கை விளக்கம் கொடுப்பதையும், தமிழரசுத் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் உரையாற்றுவதையும், திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் ஓர் பகுதியையும் படங்களில் காண்க.

(படம். 'இதயம்')

## ஆரையம்பதியும் அமிர்தநதியும் அன்றும்இன்றும் தமிழரசுக் கோட்டையே!

(மட்டுநகர் நிருபர்)

வீரர்கள் வாழும் ஆரையம்பதியும், அமிர்தநதியும் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு: இராசதுரைக்கு எதிராக திரும்பிவிட்டன என்று இங்கு போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் நடத்திவந்த பிரச்சாரம் தூள் தூளாக்கப்பட்டது. அன்றும், இன்றும், என்றும் இவ்விரு கிராமங்களும் கொள்கைவீரர்கள் வாழும்தமிழரசுக் கோட்டையே என்பதை இங்கு சமீபத்தில் நடைபெற்ற மாபெரும் தமிழரசுக் கூட்டங்கள் நிருபித்துவிட்டன.

ஆரையம்பதி செல்வாபுரத்திலும், அமிர்தநதியி

(4 ம் பக்கம் பார்க்க)

## நேர்மையானவர், கொள்கைவாதி பாராளுமன்றத்தில் இருக்கவேண்டியவர்!

செல்வாபற்றி சுந்தரலிங்கம்

''ஐக்கிய முன்னணியை முறித்தவர்கள் தமிழரசுக் கட்சியினர் என்பது சரியல்ல; அதிலே சேர்ந்த நாங்கள் ஒவ்வொருவரும், பங்குபற்றிய ஒவ்வொருவரும் பொறுப்பு என்று சொல்லவேண்டும். தமிழரசுக் கட்சியினர்தாம் இம்முன்னணியை முறித்தார்கள் என்பது பொருத்தமன்று.

தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை பல கூட்டங்களில் நான் ஆதரித்துப் பேசியுள்ளேன்: இன்றும் ஆதரிக்கின்றேன். ஏனெனில் அவர்களுடைய கொள்கைகளிற் பல சரியானவை இம்முறை தமிழ் பேசும் பிரதிநிதிகளில் கண்டிப்பாக திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், திரு. கு: வன்னியசிங்கமும் இருக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் மிகவும் நேர்மையனவர்கள். ஒரு போதும் கொள்கையைவிட்டு சற்றேனும் மாறமாட்டார்கள்.''

(1956ம் ஆண்டு மார்ச் இறுதியில் யாழ்: முற்றவெளியில் திரு. க. வி. குலசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு: சி. சுந்தரலிங்கம் பேசியது—ஆதாரம் 1-4-56 சுதந்திரன்)

## ஜெயக்கொடி ஜெயக்கொடி நாட்டுவார்!

உடுப்பிட்டித் தொகுதியில் சென்ற காலங்களை விடத் தற்போதைய நிலையை நாம் எடுத்து நோக்குமிடத்து எங்கும் ஜெயக்கொடி என்பதே பேச்சாக இருக்கின்றது எந்த மூலை முடுக்கிலும் தமிழரசின் வெற்றியில் மக்கள் அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளார்கள்.



சென்ற தேர்தற் காலங்களில் தமிழ்க் காங்கிரசுக்காக முழு மூச்சுடன் பாடுபட்டுழைத்தவர்கள் தற்பொழுது மனம் மாறித் திரு. ஜெயக்கொடி அவர்களின் வெற்றிக்காக இரவுபகலாக உழைத்து வருகின்றார்கள்.

தமிழ்க் காங்கிரஸ் அனுதாபியாக இருந்து மனமாறித் தற்பொழுது தமிழரசுக் கட்சியை ஆதரிக்கும் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் சிவசிதம்பரமும் அவரது சகாக்களும் தமிழரசுக் கட்சித் தேர்தல் நிதி எங்கே என்று கூப்பாடு போடுகின்றார்கள் என்றும் அவர் (திரு

(4ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

[பட்டம் பதவிகளுக்காக சிங்களத் தலைவர்களுக்கு கால் பிடித்துவிட்டு, 10 இலட்சம் மலையகத் தமிழ் மக்களை நாடற்றவராக்கும் பிரஜாவுரிமைச் சட்டங்களை ஆதரித்து, தமிழ் நாட்டில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு ஆதரவு கொடுத்து, இன்று தமிழன் சிங்களவனை இரந்தே வாழ வேண்டும் என்றும தமிழ் தமிழ் என்று கூறினால் சிங்களவனுக்கு கோபம் வருமென்று கூறி தமிழ்க் குலத்தின் தன்மானத்தை குழி தோண்டிப் புதைத்துவரும் கோடரிக் காம்புகளை—ஈனப் பிறவிகளைக் கண்டு மனம் கொதித்து 'பிடிசாபம்' போட்டு உணர்ச்சிமயமான கவிதை யொன்றைத் தீட்டி 'செல்வாதாசன்' எமக்கு அனுப்பியுள்ளார். அதை இன்றைய 'எண்ணத்தில்' வெளியிடுகிறோம். கடவுள் வாக்கும் கவிஞன் வாக்கும் பொய்க்காதல்லவா?]

## பொன்னு பிடி சாபம்!

பொன்னு பிடிசாபம்! பொய்யா பிடிசாபம்!
இந்நாள் வரைக்கும் இருந்தாய் பிடிசாபம்!
நாட்டில் இராவணனார் நட்ட தமிழ்க்குலத்தை
காட்டிக் கொடுப்பதற்கும் கந்து கந்தாய் மாற்றார்கள்
வெட்டித் தமிழினத்தை வேரோடு பேர்த்தெறிய
விட்டுக் கொடுத்து விழும் எச்சில் தின்பதற்கும்
பைந்தமிழனாய்ப் பிறந்த பாவி...பிடிசாபம்!
என்னைப் படைத்ததெய்வம் என்கையில் தந்ததமிழ்
உன்னை அழிக்கும் ஆற்றல் உள்ளதமிழ் என்பதனால்
மானத் தமிழ்மீது மண்போட வந்தவனே...!
ஈனத் தமிழ்த் துரோகி...இந்தா பிடிசாபம்!
முன்போர்தமிழன் விபீடணன் மொத்தத்தில்
உன்போல்ஒரு தமிழன் ஊர்கெடுத்துப் போனதனால்
எம்மவர்க்கு நீயொன்றும் இன்று புதியனல்லன்!
உன்னுடைய காலடிகள் ஒவ்வொன்றும் யாமறிவோம்!
நேற்று நீ நஞ்செடுத்து நீலமலைக் குன்றுகளில்
ஊற்றித் தமிழன் உயிர் உரிமை கொன்றகதை
ஆரைப்போய்க் கேட்டாலும் அப்படியே ஒப்புவிப்பான்!
நாட்டில் குடியுரிமை அற்ற நடைப்பிணமாய்
தோட்டத் தமிழ் மகனைத் தொலைத்தாய் படுபாவி!
என்ன கொடுமையெல்லாம் ஏ தமிழா! நீ புரிந்தாய்!
எச்சில் எலும்பை எறிந்தார்கள் சிங்களவர்......
புச்சென்று பாய்ந்து புழுதித் தெருநாய்போல்
ஓடிப்போய் மந்திரியாம் ஓர்பதவியைப் பொறுக்கி
ஆடிக்களித்தவனே...! அள்ளிவைத்த சண்டாளா!
உன்னைச் சபிக்காத ஓர்புலவன் இந்நாட்டில்
என்ன புலவன்...! எதுக்கவன் பாடுகிறான்?
காதலைப் பாடக் கவிஞருண்டு! காய்வயிற்று
வாதையைப் பாடக் கவிஞருண்டு! தத்துவ
கீதம் பொழியக் கவிஞருண்டு! செத்தார்க்கு
சாதற்கல் வெட்டுச் சடையக் கவிஞருண்டு!
பாவடிவில் இத்தனையும் பாட உதவு தமிழ்
நோவக் கிடந்து துடிக்குதெனில் நொந்தோடி
அத்தமிழைக் காக்கும் அனற்கவிதை பாடஇங்கு
முத்தமிழ்ப் பாவலர்கள் மூன்றுபேர் கூடஇல்லை!
காட்டிக் கொடுக்கும் கயவர் தலைவெடிக்கப்
பாட்டில் அறம்பாடும் பாவலனைக் காணவில்லை!
ஆனாலும் நானொருவன்...ஆமாம்...தமிழ்க்கவிஞன்
ஓநாயே! உன்னை ஒருபோதும் விடமாட்டேன்!
செந்தமிழை என்றன் செழுந்தமிழை இன்தமிழை
பைந்தமிழை அந்தப் பழந்தமிழை முத்தமிழை
வண்டமிழை நாளும் வளர்தமிழை தேன்தமிழை
சங்கத் தமிழை தனியழகுப் பூந்தமிழை
மங்கைத் தமிழை மழலை மணித்தமிழை
ஓசைத் தமிழை உயிர்த்தமிழை நற்றமிழை
ஆசைத் தமிழை அருந்தமிழை தீந்தமிழை
என்னைத் தமிழனாய் ஈழத்தில் ஆக்கிவைத்த
அன்னைத் தமிழை அடபாவி! நீ ஒருவன்
என்னவெலாம் சொல்லி இகழ்ந்தாய்! தமிழென்று
சொன்னாலும் 'பாவம்' எனச் சொன்னாய்...சிங்களவர்
நம்மை வெறுப்பர்...வருத்துவர்...நாமதனால்
சும்மா இருப்போம்...தமிழென்று சொல்லாதீர்
என்றாய்...! அடிமைபோல் ஏதேதோ வாய்பிதற்றி
நின்றாய்...! தமிழுணர்ச்சி மானநிலை அத்தனையும்
கொன்றாய்! அடகோழை! என்கோலச் செந்தமிழை
பேசவும் கூசினாய்.. உன்னைப் பெருமூச்சால்
வீசி விழவைதது வெந்தநெஞ்சால் சாபமிட்டு
பச்சை நெருப்புத்தமிழால் அறம்பாடி
முச்சந்தியில் நீ முடங்கும்நாள் காணமல்
இந்தக் கவிஞன் இனிஓய்வ தில்லையடா!
விந்தைத் தமிழா! வெறுஞ்சதையால் ஆனவனே!
கூலித் தலைவா! குலம்விற்று வாழ்பவனே!
போலிப் படுபாவி! பொன்னு! சுயநலமே!
இந்தா பிடிசாபம்! இந்தமுறை கடைசிமுறை!
குந்துபோய் மூலையிலே...குந்து! பொதுவாழ்வு
நாளை உனக்கில்லை! நம்பு! மரக்கட்டில்
ஓலைப்பாய் ஒன்றில் உறங்கடா! போயுறங்கு!
வாழட்டும் ஈழத் தமிழன் வரலாறு!

**செல்வதாசன்**

# 'ஏழைகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நான் என்றும் நண்பனே!'

## அநீதி எந்தவடிவத்தில் வந்தாலும் அதை எதிர்ப்பேன் தந்தை செல்வா கூறுகிறார்

"ஏழை பணக்காரன், ஆண்டான் அடிமை என்ற பேதத்தை ஒழித்துக்காட்டுவதுதான் 'கம்யூனிச தத்துவம்' என்றால் தான் அதற்கு விரோதியல்ல. ஆனால் இந்த இலட்சியத்தை அடைவதற்கு உலகில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் வழிமுறைகளுக்கே நான் மாறானவன். அகிம்சையில் எப்போதும் உறுதியான நம்பிக்கையுள்ள நான் கொடிய வழிமுறைகளால் இந்த இலட்சியத்தை அடையவேண்டும் என்ற உலக கம்யூனிஸ்ட்டுகளின் கருத்தை ஏற்றுககொள்ள முடியாது.



ஏழையின் கண்ணீரையும் தொழிலாளியின் வியர்வையையும் கண்டும் காணாதவர்கள்போலிருக்கும் கொடிய மனிதர்களில் ஒருவராக என்னை நினைக்கிறீர்களா? இல்லை. உருகத் தெரிந்த இதயம் ஒன்று என்னிடம் எப்போதுமே உண்டு!

இந்நாட்டின் பத்துலட்சம் தொழிலாளரின் குடியுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அவர்கள் மிருகங்கள்போல் ஆக்கப்படும் துன்பங்களை கண்டு உணர்ந்து உருகி நாங்கள் தோற்றுவித்த இயக்கமே தமிழரசுக் கட்சி!

தொழிலாளி அவன்புரியும் தொழில் அடிப்படையில் 'சாதி சாதியாகப் பிரிக்கப்பட்டு 'தாழ்ந்த சாதிக்காரன்' என்று ஒதுக்கப்படுவதை கண்டு மனம் நொந்து பாராளுமன்றத்தில் சமூக ஏற்றத் தாழ்வு தடைச் சட்டம் வர மூலகாரணமாக இருந்தது தமிழரசுக் கட்சி அல்லவா?

முற்போக்கான எந்த நடவடிக்கையையும் நாங்கள் எதிர்த்ததில்லை.

பஸ் தேசிய மயமாக்கப்பட்டபோது அதை ஆதரித்தோம். முதலாளித்துவ 'லேக்ஹவுஸ்' ஸ்தாபனத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்தோம்.

வடபகுதி கரையோரங்களிலுள்ள மீன்பிடி தொழிலாளருக்கு அரசாங்க இராணுவவீரர்கள் கொடுக்கும் தொல்லைகளை அவ்வப்போது எதிர்த்து போராடி வருகிறோம்.

பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டபோது அது ஒரு முற்போக்கு நடவடிக்கையாக இருந்ததும் பலவந்தமாக சிங்களத்தைத் திணிக்க அது உதவும் என்பதாலும் தமிழ் மாணவர்களின் கல்வித் தரத்தை குறைப்பதற்கு முயற்சி செய்யப்படும் என்பதாலுமே அதை எதிர்த்தோம்.

ஆகவே தொழிலாளிகளுக்கு எதிரானவர்கள் என்று எங்களை சிலர் கூறுவது ஒரு பச்சைப்பொய் என்பதை சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

பணக்காரன் தொழிலாளியை நசுக்குவதை மட்டுமல்ல உலகத்தில் நீதிக்கு மாறாக யார் என்ன காரணதுக்காக அடக்கப்பட்டாலும் அவ்வாறு அடக்கப்படுகிறவர்கள் பக்கமே நான் நிற்பேன்.

வெள்ளை நிறத்தவர் கறுப்பு நிறத்தவரை அடக்கும்போது அம்மக்கள் எதிர்த்துப் போராடுகிறார்கள். இப்படி அவர்கள் போராடுவது வகுப்புவாதமாகாது—அதுபோல ஒரு மொழி பேசும் இன்னொரு மொழி பேசும் இனத்தை நசுக்கும்போது அவ்வாறு நசுக்கப்படும் அந்த இனம் அக்கொடுமையை எதிர்த்துப்போராடுவதும் வகுப்புவாதமாகாது.

பொருள் அடிப்படையில் தொழிலாளியை அடக்கும்போது தொழிலாளி எதிர்த்துப் போர்க்குரல் கொடுப்பது மட்டும் முற்போக்கு—ஒரு மொழி பேசும் பெரும்பான்மை இனம் தன் நாட்டிலுள்ள இன்னொரு மொழி பேசும் சிறுபான்மை இனத்தை நசுக்கும்போது அதை எதிர்த்துப் போராடுவது மட்டும் வகுப்புவாதமா?

அநீதியை அது எந்த வடிவில் நிகழ்ந்தாலும் எதிர்த்துப் போராடுகிறவனே இந்த உலகில் நாகரிகமான மனிதன் என்று நான் கூறுவேன்.

இலங்கையைப் பொறுத்தவரை நாங்கள் அடக்கப்படும் தமிழினத்துக்காகப் போராடுகிறோம். அதே வேளையில் ஏழைத் தொழிலாளியின் நலனுக்காகவும் குரல்கொடுத்து வருகிறோம்.

"சுதந்திர சோசலிச சமஷ்டிக் குடியரசு கொண்ட தமிழரசே எங்கள் இலட்சியமாகும்.

(சுதந்திரன் சிறப்பு நிருபருக்கு அளித்த பேட்டி)

# கடமை வீரர் வெற்றி பெறட்டும்

(3 பக்கம் தொடர்ச்சி)

தொகுதிக்கு உள்ளேயும் வெளியேயும் திரு நவரத்தினத்திற்கு வளர்ந்து வருகின்ற செல்வாக்குக் கண்டு கலங்குகின்ற மாற்றார் கூட்டம் கட்டுப்பாடற்ற கேவலமான பிரச்சாரங்களில் ஈடுபட்டு அவர்தம் கறையற்ற வாழ்விற்கு களங்கம் கற்பிக்க முயல்கின்றது.

இவை அனைத்திற்கும் தக்க பதில் அளித்திடும் மறக்கவோ - மறுக்கவோ - மறைக்கவோ முடியாத உண்மைகளை களங்கமற்ற முறையில் படைத்திருக்கின்றார் "அன்புள்ள தம்பி"யில் நீ பார்த்திருப்பாய் என்று நம்புகிறேன். அவர் கூறியது போல் அக்கடிதம் எமக்கெல்லாம் ஒரு விருந்துதான். இல்லையா?

நீ உனது மடலில் திரு, குமாரசாமிக்கும் திரு. நவரத்தினத்திற்கும் இடையே உள்ள மகத்தான வேறுபாடுகளை நாட்டுக்கு நினைவுபடுத்த வேண்டும் என்று எழுதியிருந்தாய்? உண்மைதான்.

"தனக்குப் பின் தன் தனயனே அன்றி வேறு யாருமல்ல" என்று மமதையுடன் கூறிய திரு. குமாரசாமி எங்கே?

'தனது வெற்றி தனிப்பட்ட வெற்றியல்ல. தமிழரசுக்கட்சிக்கு-கட்சி மீது கொண்ட நம்பிக்கைக்கு-தந்தை செல்வாவுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி' என்று கூறுகின்ற [illegible] எங்கே?

'தேர்தல் காலங்களில் உழைத்த தன் கட்சி ஆதரவாளர்களது மரணத் தகவல் அறிந்தும் கூட ஒரு அனுதாபச் செய்தி அனுப்பாது தேர்தல் நெருங்கும் போது மாத்திரம் வீடு தேடி ஓடி வருகின்ற' அவர் எங்கே?

"மழையா—வெயிலா, இரவா—பகலா, புயலா—வெள்ளமா என்று பாராது காலமெலாம் ஆதரவு நாடுகின்ற சொந்தத்தொகுதியில் மாத்திரமன்றி அரசியல் உரிமையே இல்லாத மலையக மக்கள் மத்தியிலும் செயல் படுகின்ற" இவர் எங்கே?

இப்படிப் பல பல. அது மாத்திரமல்ல. பேசுவதிலேயே பெரும் பொழுது கழிக்கின்றபெருந்தலைவர்கள் மத்தியில் நம் நவம் ஒரு செயல் குன்று.

கடமையுணர்ச்சியின் அடிப்படையில் பொறுப்புணர்ந்த அவர் ஒரு கண்ணயராத கடமை வீரர்.

பண்புதவறுத அரசியல் வாதி அவர்.

அவரது வெற்றி—அது அல்ல நமது குறிக்கோள். ஏனெனில் அவரது வெற்றி நிச்சயிக்கப்பட்டதொன்று. எத்தனை வாக்குகளால் அவர் வெற்றி பெறுகிறார் என்பதே எமது சிந்தனையில் இருக்க வேண்டும். இந்தத் தடவை அவருக்கு அளிக்கப்படுகின்ற வாக்குகளின் எண்ணிக்கை—எதிரிகளை மீண்டும் தலை தூக்காமல் செய்யும் வேட்டுக்களாக அமைய வேண்டும்.

எம் வளர்ச்சி கண்டு, சிறப்புக்கண்டு — வயிற்றெரிச்சல் படுவோர், எதிர்பார்த்து ஏமார்ந்தோர் — மருட்சி அடையவேண்டும்.

நம் பலம் பெருக்கி முரசு கொட்டிடு. அதுகேட்டு மற்றையோர் அதிரட்டும்.

இளைஞர்களது இந்த இலட்சியப் பரணி எமது உரிமை முழக்கத்தை—தனது இதயமூச்சாகக் கொண்டுள்ள கடமைவீரருக்கு--பாசமுள்ள அண்ணனுக்கு—பரிவு மிக்க தம்பிமார்களின் காணிக்கையாகட்டும். மீண்டும் சந்திக்றேன் வணக்கம்.

இப்படிக்கு.
அன்பு நண்பன்,
ரவி—அன்பழகன்

# மலையகத்தையும் ...

(3 பக்கம தொடர்ச்சி)

கையுமே இல்லை என்பேன். பச்சைப் பொய் சொலவதிலும் முன்பின் முரணைச் சொல்வதிலும் மலையக மட்டு நகர் தலைவர்களின் காலை வாரி விடுவதிலும் முதலாளித்துவ பத்திரிகைக்கு வால் பிடிப்பதிலும் தமிழரசுக்கட்சியைத் திட்டித் தீர்ப்பதிலும் சிங்கள வகுப்புவாதிகளோடு கொஞ்சிக்குலாவுவதிலும் பொன்னம்பலமும் நவரெத்தினமும் அதிகம் வேறுபாடில்லாதவர்களே!

# மலையகத்தையும் மட்டுநகரையும் ஒதுக்கிவிட்டு சுயாட்சி பற்றிப் பேசுவது கேலிக்கூத்து

## யூ. என். பியின் ஊதுகுழலான ஏரிக்கரையை முண்டு கொடுத்து காத்தவர் நவரெத்தினம்!

### சுயாட்சிக் கழகத் தலைவருக்கு பண்டிதர் சூடு!

(நமது சிறப்பு நிருபர்)

"ஜி. ஜி. பொன்னம்பலத்தைப் போல் மலைநாட்டையும் மட்டக்களப்பையும் மறந்து ஒதுக்கிவிட்டு அரசியல் நடத்துகிறவர் காவலூர் நவரெத்தினம். அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் "மாண்டுபோன சங்கிலியன் காலத் தமிழரசை மீண்டும் நிறுவப் பாடுபடுவோம்" என்று கூறுகிறார். சங்கிலியன் காலத் தமிழரசு மட்டக்களப்பையும், மலைநாட்டையும் உள்ளடக்கி இருக்கவில்லை. "யாழ்ப்பாணத்துக்குள்ளே மட்டும தமிழ் இராச்சியம் அமைக்கப்போகிறாரா சுயாட்சித் தலைவர்?"

சுயாட்சிக் கழகத் தேர்தல் விஞ்ஞாபனத்தைக்கண்டித்து சுதந்திரனுக்கு விடுத்த தனி அறிக்கை ஒன்றில் காவலூர்த் தமிழ்த் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டுள்ளார். பண்டிதரின் அறிக்கை பின்வருமாறு:—

"தமிழரசுக் கட்சியைப் பற்றிப் பொய்யான செய்திகளைப் பரப்புவதே சுயாட்சிக் கழகத்தேர்தல் விஞ்ஞாபனத்தின் நோக்கமாக இருக்கக் கண்டேன்.

"தமிழரசுக் கட்சி கடந்த ஐந்து வருட காலத்துள் யாதொன்றையும் தட்டிக் கேளாது வழங்கிய ஒத்துழைப்பால் இன்று ஈழத் தமிழினம் அடிமை நிலையில் இருக்கிறது" என்று நவரெத்தினத்தின் சுயாட்சிக் கழகத் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது. இது பிழையான கூற்ருகும்—நான்கு ஆண்டுகளே தேசிய அரசாங்கத்தை நாங்கள் ஆதரித்தோம். அதில் மூன்று ஆண்டுகள் சுயாட்சிக் கழகத் தலைவரும் எங்களோடு சேர்ந்து தேசிய அரசாங்கத்தை ஆதரித்தார்.

"நாங்கள் சேர்ந்து ஆதரித்ததால் தமிழ் மொழி சிறப்பு ஏற்பாடுகள் சட்டம் அமுலாகியது என்றும் சிங்கள பௌத்த பிக்குவைச் சுட்டுக் கொலை செய்யப்படும் நிலையில் அச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு காரணமாய் இருந்தோம் என்றும் மாவட்ட சபை விஷயத்தில் மட்டும் பொன்னம்பலம், ஹேமா பசநாயகா, தினபதி போன்ருேர் செய்த விஷமப் பிரசாரத்தால் அந்த நல்ல காரியத்தை நிறைவேற்ற முடியாத நிலைக்காளாஞேம் என்றும் கூறுகிறேம் நாங்கள். ஆனல் மூன்ருண்டுகள் ஒத்துழைத்து ஒரு நன்மையும் யு. என். பி.யில் தான் பெறவில்லை என்று நவரெத்தினம் கூறுகிறார். ஏமாற்றப்பட்டது யார் நாங்களா அல்லது நவரெத்தினமா?

தமிழரசுக் கட்சி மாவட்ட சபை அடிப்படையில் யு. என். பி. யை ஆதரிக்க முடிவெடுத்த நேரத்தில்—அதன் பின்பு தேசிய அரசாங்கத்தில் சேர்ந்த நேரத்தில் எல்லாம் கட்சியைவிட்டு வெளியேருமல் வாய்மூடி மௌனியாக இருந்து எங்களோடு சேர்ந்து தேசிய அரசாங்கத்தில் ஒத்துழைத்த நவரெத்தினம் நாங்கள் சேர்ந்ததும் ஒத்துழைத்ததும் தவறு என்று இப்போது கூறுவதில் அர்த்தம் ஏதாவது உண்டா? இது குதர்க்கம் ஆகாதா?

தனது கட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'மலைநாட்டுத் தமிழர்களைத் தமிழரசுக் கட்சி கைவிட்டுவிட்டதாக நவரெத்தினம் கூறுகிறார். ஆனல் தமிழரசுக் கட்சி மலைநாட்டுத் தமிழருக்காக 'தொழிலாளர் கழகம்' நிறுவிய நேரத்தில் தமிழரசுக் கட்சி செயற்குழுவில் மலைநாட்டுக்கு என்ன தொழிற் சங்கம்? என்று எதிர்த்து நின்றதோ—இது காரணமாக கட்சியோடு சேர்த்துக் கொண்டு சில காலம் ஒதுங்கியும் இருந்த நவரெத்தினம் மலைநாட்டுத் தமிழர்களை தமிழரசுக் கட்சி ஒருபோதும் கைவிட்டதில்லை என்பதை மலையக மக்களே அறிவார்கள்! பொய்க்குப் பேர் போனவர் பொன்னம்பலம் என்ற பழைய நிலைக்கு இப்போது குட்டிக் காங்கிரஸான சுயாட்சிக் கழகத் தலைவரும் வருகிறார்.

"தமிழரசுக் கட்சி தமிழ்க் காங்கிரசின் பாதையில் போகிறது" என்று தனது கழக தேர்தல் அறிக்கையில் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார் நவரெத்தினம். இதே நவரெத்தினம்தான் சுன்னகம் பட்டினசபை ஆய்வுக்குழு அரங்கில் உரையாற்றுகையில் "இன உணர்வற்று மொழியுணர்வற்று அரசியல் அக்கறையில்லாதவர்களாய் எவராயினுஞ்சரி என்றிருந்த ஈழத் தமிழினத்திற்கு இன உணர்ச்சியும் விடுதலை உணர்வும் நல்கிய தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களே!" என்று பேசியிருக்கிறார். நாங்கள இப்படி ஒருபோதும் பொன்னம்பலத்துக்குத் துதிபாடியதில்லை! ஒற்றையாட்சியே சரி என்று சொல்லும் பொன்னம்பலத்துக்கு 'சுயாட்சி கோரும் நவரெத்தினம் துதி பாடலாமா?'

தமிழரசுக் கட்சி இதுவரை எந்த அரசாங்கத்தையும் ஆதரிக்கப் போவதாக முடிவெடுக்கவும் இல்லை—அறிவிக்கவும் இல்லை. ஆனல் "வரும் எந்த அரசாங்கத்தோடும் கண்ணை மூடிக் கொண்டு தமிழரசுக் கட்சி சேரும்" என்கிறார் நவரெத்தினம்.

சுயாட்சி கழக தேர்தல் விஞ்ஞாபனத்தில் "நாங்கள் (சுயாட்சிக் கழகத்தின்) எந்த ஒரு சிங்களக் கட்சிக்கும் அரசாங்கத்தை அமைக்க உதவ மாட்டோம்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனல் யு. என். பி. அரசாங்கத்தை அமைக்க சிங்கள மக்களிடையே வகுப்புவாத பிரசாரம் நடத்தும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் மீது பாராளுமன்றத்தில் பண மோசடி குற்றம் பற்றி விசாரிக்க கமிஷன் நியமிக்க வேண்டுமென டாக்டர் என். எம். பெரேரா பிரேரணை கொண்டு வந்த போது லேக்ஹவுசுக்கு சார்பாக அப்பிரேரணையை எதிர்க்காமல் இருந்தார் நவரெத்தினம். இது யு. என். பி.க்கு நவரெத்தினம் மறைமுகமாகத் தரும் ஒத்துழைப்பு ஆகாதா? இது மட்டுமா?



'அறிஞர் அண்ணு அவர்களைக் கீழ்த்தரமாகக் கிண்டல் செய்து தாக்கி தமிழக தி. மு. க.வை நையாண்டி செய்து கருணநிதியை கௌரவக் குறைவாக எழுதி திட்டித் தீர்த்த பத்திரிகைகள் லேக்ஹவுஸ் பத்திரிகைகள். அந்தப் பத்திரிகைகளுக்கு காவலூர் நவரெத்தினம் மறைமுக ஆதரவு கொடுத்து வருவதேன்? நான் நினைக்கிறேன் அவர் அண்ணுவைத் தாக்குபவர்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்—ஏனென்ருல் அவரே ஒரு முறை அறிஞர் அண்ணுவைத் தாக்கியவர் தானே? "அண்ணுவின் நிழலில் தமிழரசுக்கட்சிக்காரர் ஒதுங்குகிருர்கள்" என்று சொன்னவா தானே?

சுயாட்சிக்கழகத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் "சோஷலிச அடிப்படையில் ஈழச் சமுதாயம் அமையவேண்டும் என்பதுதான் கழகத்தின் கொள்கை" என்று கூறப்பட்டிருக்கிறது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் சோஷலிசம் பேசிவிட்டு முழுமுதலாளித்துவ "லேக்ஹவுஸ்" ஸ்தாபனத்தை ஆதரிக்கிருர் சுயாட்சிக் கழகத் தலைவர். இதுவும் அவருக்குப் புதிய போக்கு அல்ல. அசல் தமிழ் தீவிரவாதம் பேசி விட்டு பச்சை சிங்கள வகுப்புவெறியர்களான குணசேன பசநாயக்கா குழுவின் 'தினபதி' பத்திரிகை நிறுவனத்துக்கு வால் பிடிப்பவர் தானே நவரெத்தினம். கொள்கை வேறு செய்கை வேறு என்பது அவரோடுஊறிப்போன குணம்!

இன்னும்ஒரு விஷயம் நான் கூற வேண்டும். அரசாங்க ஊழியர் மொழிப் பிரச்சினையில் நவரெத்தினத்தின் நிலை என்ன? தமிழரசுக்கட்சி சிங்களம் படிக்கும் விஷயத்தில் அரசாங்க ஊழியர்களை கைவிட்டு விட்டது என்று அடிக்கடி கூறுகிறவர் நவரெத்தினம். தான் அவர்களைக் கைவிடவில்லை என்று ஏன் தலைநிமிர்ந்து நவரெத்தினத்தால் இதுவரை கூற முடியவில்லை. "இப்பொழுதும் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்கக்கூடாது என்றுதான் நாங்கள் சொல்கிறேம்" என்று துணிந்து நவரெத்தினம் கூறுவதில்லை? கூறமாட்டாரர். ஏனென்ருல் ஊர்காவற்றுறை இளைஞர்கள் அவரிடம் போய் "ஐயா எங்களுக்கு வேலைவாய்ப்பு நீங்கள் பெற்றுத்தர வேண்டும். என்று கேட்கும் போது "வேண்டாம் தம்பி உங்களுக்கு அரசாங்க உத்தியோகம். மூன்று ஆண்டுகளுள் சிங்களம் படிக்க வேண்டும். ஆகவே வேலை உங்களுக்கு வேண்டாம்" என்றுசொல்ல இவரால் இயலாது!

தமிழரசுக்கட்சியைப் போல் அடிப்படைக் கொள்கையில் உறுதியாக இருந்து விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டே அதே நேரத்தில் சாணக்கியமாக சில காரியங்களைச் சாதிக்க அவருக்குத் தெரியாது.

சமீபத்தில் அவரது சிங்களக் கூட்டாளிகள் வெளியிடும "தினபதி" பத்திரிகையில் தடபுடலான ஓர் அறிக்கை வேறு வெளியிட்டிருக்கிருர் சுயாட்சிக்கழக நவரெத்தினம்: "அரசுக்கு மண்டியிடாமல் தூர நின்றே உரிமை பெறலாம்! அரசாங்கங்களோடு உறவு கொள்ள வேண்டியதில்லை" என்று தமிழரசுக்கட்சியை மறைமுகமாகத் தாக்குவதாக நினைத்துக் கொண்டு ஏதேதோ கூறி இருக்கிருர் அவர் "தூர நின்று உரிமை பெறுவேன்" என்று சொல்லும் சுயாட்சிக்கழக நவரெத்தினம். யூ. என். பி. அமைச்சர் பிரேமதாசாவுக்குப் பக்கத்தில் போய் நின்று குடைபிடித்தது ஏன்?

"மொத்தத்தில் தமிழரசுக் கட்சியை ஒழித்துக் கட்டுவதைத் தவிர காங்கிரஸ் கட்சிக்கும் சுயாட்சிக்கழகத்துக்கும் வேறு எந்தக் கொள்

(2-ம் பக்கம் பார்க்க)

---

# கடமை வீரர் வெற்றிபெறட்டும்!

## காட்டிக்கொடுப்போர் கதிகலங்கட்டும்!

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள என் நண்பனே!

தேர்தல் காலம் இது.

மந்திரி நாற்காலியே குறிக்கோளாக—பதவியே இலட்சியமாகக்கொண்ட சந்தர்ப்பவாதிகள் மக்கள் பணியாற்ற நான்— நீ என்று போட்டி போடுகின்றவேளை.

அரசியல் வாழ்வு அஸ்தமித்த— அரசியல் உலகிலிருந்து விரட்டப்பட்ட சுயநலவாதிகள் மக்கள் மத்தியில் தோன்றி ஆற்றிய பணிகள் ஏராளம்—ஆற்ற இருப்பவை எண்ணிக்கையிலடங்கா என்று தம்பட்டம் அடிக்கின்ற தருணம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் மகத்தான பொறுப்பு —மாபெரும் பொறுப்பு இளைஞர்களாகிய எம்மைச் சார்ந்திருக்கின்றது. ஆம்! அதுதான் தொகுதி தொகுதியாக "தன்னலம் கருதா- தூய்மையான நோக்கம் கொண்ட —உண்மையான அரசியல்வாதியின் வெற்றிக்குப்பாலம் அமைக்க வேண்டியது.

எமது தொகுதியில் மக்களுடைய ஆதரவை நாடுபவர்கள் இருவர்,

ஒருவர் கடந்த தேர்தல்களில் இளைஞர்கள் மத்தியில் புதியதொரு அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய திரு. வி. என். நவரத்தினம்.

மற்றையவர் திரு. நவரத்தினம் அரசியலில் ஈடுபடுவதற்கு முன், சாகச்சேரி தொகுதி என்னுடையதே என்று அகங்காரத்துடன்— ஆணவத்துடன் கூறி அதன் பலனை நன்கு அனுபவித்த முன்னுள் அங்கத்தவர் திரு. வி. குமாரசாமி இவர் மீண்டும் வருகின்ருர்.

இவர்களில் எமது தொகுதி முன்னேற்றத்திற்கு மூலகாரணமாக இருந்தவர்—இருக்கின்றவர் திரு. நவரத்தினம் தான என்பதை நாம் அறிவோம். நாடறியும். இதனல்தான் தேன் குடத்தைச் சுற்றி ஈக்கள் வட்ட மிடுவது போல் இவரைச் சுற்றி இளைஞர் குழாம் அணி—அணியாகக் காட்சி தருகின்றனர்.



எல்லோரும் பாராட்டுகின்றனர். ஆனலும் ஒரு சிலர் குற்றம் கூறுகின்றனர். அவர்கள் எமது தொகுதியில்வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்து விட்டது. வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தத் தவறிவிட்டார் திரு. நவரத்தினம் என்றும் கருதுகின்றனர்.

இன்று நாட்டில் பரவலாக பரவி வருகின்ற ஒரு பிரச்சினை இந்த வேலையில்லாத் திண்டாட்டம். சாதாரண அங்கத்தவராலோ— அமைச்சராலோ இலகுவில் தீர்க்கப் படக்கூடிய பிரச்சினை அல்ல அப்படியிருந்தும் சற்றே எமது தொகுதியைக் கவனித்துப்பார்ப்போம்.

இ. போ. சபையில் பணியாற்றுகின்ற சாரதிகளைக் கணக்கிட்டுப்பார். இவர்களில் அதிகப்படியாஞேர் சாவகச்சேரியைச் சார்ந்தவர்கள் அன்ருே? யார் இதற்குக்காரணம்?

சாவகச்சேரியில் விரைவில் நிறுவப்பட இருக்கும் "நவீன உப்பளம்" ஆயிரக்கணக்காஞருக்கு வேலை வாய்ப்பு அளிக்க இருக்கின்றதே? யாருடைய முயற்சியினுல்?

"நவீன உப்பளத்தில் வேலை வாங்கித் தருகிறேன். வாருங்கள் என்னிடம்!" என்று இளைஞர்கள் காலை வருடுகின்றவர்களை கேட்டுப்பார்? பதில் அளிக்கமுடியுமா அவர்களால்?

புதிய உப்பளங்களை நிறுவுவதை விட தற்போதுள்ள உப்பளங்களை விருத்தி செய்தல் போதுமானது என்று அரசாங்கம் கொண்டிருந்த கருத்தை மாற்றி; தற்போதுள்ளவற்றை விருத்திசெய்வதோடு சாவகச்சேரியில் நவீன உப்பளமும் நிறுவப்படவேண்டும் என்று ஆணித்தரமான ஆதாரங்காட்டி அரசினரை இணங்கச் செய்தவர்கள் செனட்டர் திருச்செல்வமும்— திரு. நவரத்தினமும்தான். ஆயினும் நாம்தான் இதைச் செய்தோம், ஆகவே எமக்கே உங்கள் வாக்கு என்று உரிமை கொண்டாடவில்லை அவர்கள். ஆனல் தேர்தல் வேளைகளில் மக்கள் தரிசனம் நாடுபவர்கள் கேவலம் இதை அரசியல் பிரச்சினையாக்கி வாக்கு வேட்டையாடுவது விந்தையிலும் விந்தையல்லவா?

(2-ம் பக்கம் பார்க்க)

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

## செல்வாவுக்கும் சுந்தரருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

### எஸ். டி. சண்முகநாதகுருக்களுக்கு ஓர் அரசியல் பாடம்!

‘1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அப்போது தமிழரசுக் கட்சித் தலைவராக விருந்த திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் போட்டியிட்டார். தேர்தலில் தோல்வி கண்டார். தேர்தல் வழக்கில் தோல்வி கண்டார். எனினும் தோல்வி அவரிடம் தோல்வி கண்டது!

1952ல் தமிழ் மக்கள் அவரை, அவர் கொள்கையை, தீர்க்கதரிசனத்தை, அந்தரங்க சுத்தியை. அலட்சியம் செய்தனர். அவரைக் கைவிட்டனர். ஆனல் அவர் மக்கள் பணியை அலட்சியம் செய்யவில்லை; மக்களைக் கை விடவில்லை. பாராளுமன்றப் பதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தொடர்ந்துபணி புரிந்தார் —புரிகிருர்— புரிந்துகொண்டேயிருக்கிருர். இலட்சிய வீரர்கள் வரிசையில் திரு. செல்வநாயகம் இன்று முன்னணியில் நிற்கும் இரகசியம் இதுதான்!

1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அவர்கட்சியில் போட்டியிட்ட சிலர் தோல்வி கண்டனர், உண்மைதான் ஆயினும் அவர்கள் மக்கள் அரங்கிலிருந்து புறமுதுகிட்டுஓடிவிடவில்லை. டாக்டர் நாகநாதனுர், ராஜமாணிக்கனுர், மாணிக்கவாசகனுர், துரைரத்தினம் ஆகியோர் இன்றும் கொண்ட பணியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிருர்கள். தங்களை அலட்சியம செய்த மக்களை அவர்கள் அலட்சியம் செய்ய முடியவில்லை. காரணம்: மக்கள் பணியென்பது அவர்களுக்கு பதவி பெற்றுப் பண்டமாற்றுச் செய்யும் கடைச் சரக்கல்ல. இரத்தத்தோடு கலந்த இதயப்பணி அதுவாகும்

இந்தச் சூழ் நிலையில் சுந்தரலிங்கனுர் சொல்கிருர் வவுனியாமக்களைப் பார்த்து: ‘‘என் கொள்கையைநீங்கள் ஏற்கவில்லை என்னிடம் புத்தி கேட்டு வராதீர்கள். ஓடிப்போங்கள். இனி மக்கள் பணிபுரியேன். நான் உங்களைக் கைவிட்டுவிட்டேன்’’ என்று. அலட்சிய மாவீரரே’, வாழ்வீராக!

இலட்சியத்தில் சுந்தரருக்கு உறுதியில்லை மக்கள் பணியில் இவருக்கு மனம் பதிந்த நாட்டமில்லை, இந்த நிலையில், இன்றுதான் தமிழ் மக்கள் இவரை ஆதரித்திருந்தாலும் என்றுதான் இவர் தமது ஆதரவாளர்களை நட்டாற்றில கைவிடுவாரோ என்று எண்ணுவது தவருகாதல்லவா?

—எஸ்.டி. சிவநாயகம்
(தமிழோசை 15. 5. 69.)

# கொழும்பு வடக்கு தமிழ் வாக்காளருக்கு வழி காட்டும் இரு காட்சிகள்!

கொழும்பு வடக்குதொகுதியில் வாழும் தமிழ் வாக்காளர்களே! உங்களுக்கு வழி காட்டும் இருபடங்கள் இங்கு காணப்படுகின்றன.

முதல் படம்—கொழும்பு மாநகரசபைக்கு சொந்தமான லொறி ஒன்றில் பொறிக்கப்பட்ட தமிழ் எழுத்தைச் சுட்டிக் காட்டியபடி ஹரிஸ் விக்கிரமதுங்கா காணப்படுகின்ருர். கொழும்பு மாநகரசபை தமிழைப் புறக்கணிப்பதையும், மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களில் தமிழ் இடம்பெருததையும் கொழும்பு மாநகர சபையின் சாதாரண உறுப்பினரான திரு. ஹரிஸ் அவர்களின் கவனத்துக்கு தமிழ் மக்கள் கொண்டு வந்த போது, அதன் நியாயத்தை உணர்ந்து, மாநகரசபையில் வாதாடி தமிழுக்கு உரிமை பெற்றுக் கொடுத்தவர் ஹரிஸ். இதனுல் இன்று கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தில் தமிழுக்கு இடம் கிடைத்திருக்கிறது. மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களிலும் தமிழ் இடம் பெறுகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளில் எவ்வளவு தூரம் அனுதாப முள்ளவர் திரு. ஹரிஸ் என்பதை இது துலாம்பரமாகவிளக்குகிறது.







அடுத்த படத்தை பாருங்கள்: இது திரு. வீ. ஏ. சுகததாசாவின் அமைச்சின் கீழ் வரும் இ. போ. ச. பஸ் தரிப்பு நிலையம் ஒன்றின்படம் முழுக்க முழுக்க தனிச்சிங்களம் இப்பெயர்ப்பலகையில் இடம்பெற்றிருக்கிறது, அதுவும் திரு. சுகததாசா போட்டியிடும் தமிழர்கள் அதிகம் வாழும் கொழும்பு வடக்கு தொகுதியிலுள்ள ஜம்பெட்டா வீதியிலேயே இந்த நிலையென்ருல் திரு. சுகததாசாவின் அமைச்சு எப்படித் தமிழை ஒதுக்கி தமிழர்களைப் புண்படுத்தி வருகிறது என்பதற்கு இது தகுந்த உதாரணமல்லவா?

### ஜெயக்கொடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவசிதம்பரம்) தனக்கு மக்களால் வழங்கப்பட்ட இரண்டு கார்களுக்கும் நேர்ந்த கதி என்ன என்பதைப் பகிரங்கமாகக் கூறுவாரா? என்று கேட்டார்.

இவ்வாறு தமது பிழைகளை மூடி மறைத்துக் கொண்டு எத்தனை காலம் மக்களை முன் நடமாட முடியும் என்று மேலும் குறிப்பிட்டார். அண்மையில் கரணவாய் தெற்குக் கிராமத்தில் திரு. ஜெயக்கொடி அவர்களுக்கு மக்கள் அளித்த பிரமாண்டமான வரவேற்பைக் கண்ட எவரும் இம்முறை அவரது வெற்றியில் எள்ளளவும் சந்தேகமில்லை எனத் துணிந்து கூறுவர்,

### தமிழன் தலைநிமிர்ந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலவற்றிற்கும் சென்று ஆங்காங்கு நடைபெறும் அரசியல் முறைகளை உன்னிப்பாக பார்த்து அவற்றின் பலாபலன்களை நேரில் தெரிந்துகொண்டவர். தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை மலேயாவிலும், தமிழ் நாட்டிலும்சிறப்புற நடாத்தியவர்.

அவர் சொல்லுகிருர்:—

இலங்கைக்கு ஏற்றது சமஷ்டி ஆட்சிமுறைதான் சுவிட்சர்லாந்தில் உள்ளது போன்ற ஒரு சமஷ்டி ஆட்சி முறை ஏற்படுத்துவதே சாலச் சிறந்தது.

தமிழ்பேசும் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகள் என்று கருதக்கூடாது ஸ்திரமான ஐக்கியத்தைக் கட்டிகாக்கமுடியும் என்ருல் அதற்காகப் பாடுபடவேண்டும்.

அது சாத்தியமில்லாத பட்சத்தில் சுவிட்சர்லாந்தின் அடிப்படையில் இலங்கையில் சமஷ்டி ஆட்சி அமைப்பதுதான் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சிறந்த பரிகாரமாயிருக்க முடியும்.

# சிங்கள ஆட்சி அதிர ஈழத்துக் காந்தி நடத்திய அறப்போர்!

### மந்திரிப் பதவி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி அடுப்படி முன்னணி குமாரசாமி தான் போக்குவரத்து மந்திரியாவேன் என கூறிக்கொண்டுதிரிகிருராம்.

வட்டுக்கோட்டை தியாகராஜா தான் கல்வி மந்திரியாவதாக பகற்கனவு காண்கிருராம்.

உடுப்பிட்டி சிவசிதம்பரம் நீதிமந்திரி என்று நிலாவில் உலாவுகிருராம்.

ஆனந்தசங்கரி தான் அரை மந்திரி என ஆலவட்டம் போடுகிருராம்.

இவற்றையெல்லாம் கேள்வியுற்ற ஆயுள்காலத் தலைவர் திரு பொன்னம்பலம் கோபமுற்று பொதுத்தேர்தலில் ஒரு இடம் காங்கிரசுக்கு கிடைப்பதே குதிரைக்கொம்பாக இருக்கும்போது ஏன் இப்படி எல்லாம் வீணுக கனவு காண்கிறீர்கள் என இவர்களை எச்சரித்ததாக ஆனைப்பந்தி காங்கிரஸ் நிலையம் ஓர் அந்தரங்க செய்தியை வெளியிட்டுள்ளது.

### ஆரையம்பதியும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் நடைபெற்ற திரு. இராசதுரையின் இரு பிரசாரக்கூட்டங்களுக்கும் ஆயிரக்கணக்கானேர் ஆர்வமுடன் திரண்டுவந்து எதிரிகளின் பிரச்சாரத்தை தூள் தூளாக்கினர். மட்டுநகரின் முடிசூடாமன்னன் என்றென்றும் எங்கள் இராசதுரையே என்று இவ்வூர் மக்கள் வாத்சல்யத்தோடு கூறிக்கொள்ளுகிருர்கள்.



அரசாங்கக் காவலர் பட்டாளம்
அடக்குமுறை இவற்றிடையே

அருந்தமிழினத்தின் காவலர் செல்வா
படைத்தமிழர் புடைசூழ

நடத்துமொரு போர்இஃது!
நாடளுமன்றத்தின் நாற்காலி மட்டுமே

நோக்கமாய்க் கொள்ளாத நம்தலைவர்
தேடக் கிடைக்காத தமிழ்ச்செல்வம்

யாழ்ப்பாணக் கச்சேரி முன்னே...
கோடை நடுவெயிலில் குளித்தபடி

கொள்கைப் போர் ஆடுகிருர்!
நீதியும் அறமும் நிலைத்த தமிழ்நெஞ்சன்

ஏதுக்கும் அஞ்சுவனே?
அடித்தாலென்ன உதைத்தாலென்ன

பிடித்தபிடி விடாத் தமிழ்ப் பெருவீரன்
பின் போவதில்லை அம்மா!

தந்தை நடத்தும் போர்
தமிழனின் மானப்போர்!

### கட்டுக் காசைக் காப்பாற்ற பகீரத முயற்சி

வவுனியாவில் மூக்குடைபட்டு (தோல்வியடைந்து) மூதூரில் வாலறுபட்டு (கட்டுக்காசுமிழந்து] காங்கேசன்துறையில் (தந்தை செல்வாவின் கோட்டையென அறிந்தும்) கண்மூடித்தனமாக இறங்கி, வேல் வேண்டுமா? சிலுவை வேண்டுமா? என்று பிசினஸ் துவக்கி, ‘‘செல்வநாயகத்தை வெல்லுவேன்’’ என்று அன்று வீர முழக்கமிட்ட திருவாளர் சுந்தரலிங்கம், தன்னை உசார்ப்படுத்தி விட்டவர்கள் சிலரே இப்போது செல்வாவின் ஆதரவாளராக மாறிவிட்டது கண்டு, தன்னுடைய கட்டுக்காசு ஆயிரம் ரூபாயையுமாவது காப்பாற்றித் தர வேண்டுமென்று வாக்காளர்களின் கால்களில் விழ ஆரம்பித்துள்ளாராம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 25-ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.
ஆசிரியர்: கோவை மகேசன்.